Register No. | | | | | | | | |

**FQJ**

**4195–19**

(For the candidates admitted from 2009–2010 to 2016–2017)

B.A. B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2019.

(Five-year Regular Course)

Second Year — Fourth Semester

FAMILY LAW – II

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding six pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Distinguish between joint family and coparcenary. What are the rights of a coparcener in the coparcenary property?

கூட்டுக்குடும்பம் மற்றும் பங்குரிமை இவற்றை வேறுபடுத்திக்காட்டு. பங்குரிமைச் சொத்தில் பங்குரிமையாளருக்கு உள்ள உரிமைகள் யாவை?

Scanned with CamScanner

2. What is partition? How it may be effected under Mitakshara law?

பாகப்பிரிவினை என்றால் என்ன? மிதாக்ஷரா சட்டத்தின் கீழ் அது எவ்வாறு ஏற்படுத்தப்படுகிறது?

3. Explain the rules of succession of property among the legal heirs of a female Hindu under the Hindu Succession Act 1956.

1956 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு இந்துப் பெண்ணின் வாரிசுகளிடையே சொத்து இறங்குரிமைக்கான விதிகளை விளக்குக.

4. What is Wakf? Who may be appointed as Mutawalli, explain his powers under Muslim law.

வக்ப் என்றால் என்ன? முத்தாவல்லியாக யார் நியமிக்கப்படலாம், முஸ்லீம் சட்டத்தின் கீழ் அவருடைய அதிகாரங்களை விளக்குக.

5. Examine the rules of intestate succession for Christians in India.

இந்திய கிறித்துவர்களுக்கான உயிலிலா இறங்குரிமைக்கான விதிகளை ஆராய்க.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding two pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் இரண்டு குறுகிய விடைகள் எழுதுக :

(a) Avyavaharika debt.

அவ்வியவஹரிக கடன்.

(b) Doctrine of Radd.

மீட்டளிப்புக் கொள்கை.

(c) Preemption under Muslim Law.

முஸ்லீம் சட்டத்தின் கீழ் வாங்கும் முன்னுரிமை

(d) Hiba.

ஹிபா.

(e) Agnates.

ஆண்வழி உறவினர்.

(f) Sharers under Hanafi Law.

ஹனபி சட்டத்தின் கீழ் பங்குதாரர்கள்.

(g) Class I heirs.

முதல் வகுப்பு வாரிசுதாரர்.

(h) Domicile by birth.

பிறப்பால் வாழ்விடம்.



Scanned with CamScanner

(i) Kinds of Legacies.

உயில்வழி கொடையின் வகைகள்.

(j) Pious obligation.

அறக் கடப்பாடு.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A Hindu died leaving his wife, daughter, widow of a predeceased son, father and mother. Divide his property.

ஒரு இந்து தன்னுடைய மனைவி, மகள், முன்பு இறந்த மகனின் விதவை, தந்தை மற்றும் தாய் ஆகியோரை விட்டு விட்டு இறக்கிறார். அவருடைய சொத்துக்களை பகிர்ந்தளிக்கவும்.

8. A Hindu female died leaving her father, mother, two legitimate sons and two illegitimate daughters. Distribute her estate.



ஒரு இந்துப் பெண் தனது தந்தை, தாய், இரண்டு முறை மணப் பிறப்பு மகன்கள் மற்றும் இரண்டு முறையிலா மணப் பிறப்பு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். அவரது சொத்தை பிரித்தளிக்கவும்.

9. A female Christian died leaving her three grandsons through her predeceased son, husband and mother. Divide her property.

ஒரு கிருத்துவப் பெண், தனக்கு முன்னதாக இறந்துவிட்ட மகன் மூலமாக மூன்று பேரன்கள், கணவன் மற்றும் தாய் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். அவரது சொத்தை பிரித்தளிக்கவும்.

10. A Hanafi Muslim man dies leaving his wife, mother, full sister and daughter. Divide the property.

ஹனாபி முகமதியர் ஒருவர் தனது மனைவி, தாய், முழு குருதி தொடர்புடைய சகோதரி மற்றும் மகளை விட்டு விட்டு இறக்கிறார். சொத்தினை பங்கிடுக.

11. A Sunni Mohammedan male dies leaving mother, daughter and his son's daughter. Divide the estate among them.

ஒரு சுன்னி முகமதிய ஆண் தாயார், மகள் மற்றும் தன் மகனின் மகள் இவர்களை விட்டு இறக்கிறார். சொத்தை இவர்களிடையே பங்கீடு செய்க.



Scanned with CamScanner

12. A Christian man died leaving behind his widow, two sons of a predeceased daughter, father and brother. Distribute the estate.

ஒரு கிறித்துவர் தனது விதவை, முன்பு இறந்துவிட்ட மகளின் இரண்டு மகன்கள், தந்தை மற்றும் சகோதரன் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். சொத்தினை பங்கிடுக.

---



Scanned with CamScanner

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 008.

Register No.

**FA4E** | 4416–19

(For the candidates admitted during 2017-2018)

B.A.,LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019.

(Five - year Regular Course)

Second Year — Fourth Semester

FAMILY LAW – II

Time : 2½ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is meant by partition according to the Mitakshara law? Explain how a partition is effected and state when can partition be reopened?

   மிதாக்சாரா சட்டப்படி பாகப்பிரிவினை என்றால் என்ன? பாகப்பிரிவினை எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை விளக்கி அதை எப்பொழுது மீண்டும் திறக்கமுடியும் என்பதை கூறுக.

Scanned with CamScanner

2. State the rules of succession among sharers under Hanafi Law.

ஹனபி சட்டத்தின்படி பங்குதாரர்களின் உரிமை இறக்க விதிகளை கூறுக.

3. Probate shall be granted only to an executor appointed by will - Explain.

உயில் மெய்ப்பிதழ், உயில் மூலம் நியமனம் செய்யப்பட்ட நிறைவேற்றாளருக்கே வழங்கப்பட வேண்டும் - விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the term 'Hiba' under Muslim Law. What are the essential ingredients for a valid Hiba.

முகமதிய சட்டத்தில் ஹிபா என்ற சொல்லை விவரிக்கவும். ஒரு ஏற்புடைய ஹிபாவிற்கான முக்கிய காரணிகள் என்னென்ன?

5. Explain the various provisions for execution of privileged will and unprivileged will.

சிறப்புரிமை பெற்ற உயில்கள் மற்றும் சிறப்புரிமை அற்ற உயில்கள் ஏற்படுத்துவதற்கான சட்ட வகைமுறைகளை விளக்குக.



6. Mention the Class I heirs under the Hindu Succession Act 1956.

1956 –ம் ஆண்டு இந்து இறங்குரிமை சட்டத்தின்படி முதல் வகுப்பு வாரிசுதாரர்களை குறிப்பிடுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Kinds of Legacy

உயில்வழிக் கொடையின் வகைகள்

(b) Marz-ul-Maut

மரணப்படுக்கைக் கொடை

(c) Survivorship

எங்சுநர் உரிமை

(d) Special mode of acquiring a domicile in India.

இந்தியாவில் வாழ்வகம் பெறுவதற்கான தனிப்பட்டமுறை.

(e) Mutawalli

முத்தாவல்லி

(f) Mohant

மொகண்ட்

(g) Conditional bequest

நிபந்தனையுடைய உயில் வழிக் கொடை

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 008.



Scanned with CamScanner

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Hindu dies leaving an adopted son, after born son, mother, father and his widow. Distribute the estate.

இந்து ஆண் ஒருவர் தன் தத்தெடுத்த மகன், தத்தெடுத்த பிறகு பிறந்த மகன், தாய் தந்தை மற்றும் தன் விதவை ஆகியோரை விட்டுவிட்டு இறக்கிறார். அவர் சொத்தை பங்கிடுக.

9. A Christian male dies leaving a widow, two sons and two daughters – Distribute the estate.

ஒரு கிறித்தவ ஆண் தனது விதவை, இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் ஆகியோரை விட்டுவிட்டு இறக்கிறார். சொத்தினை பகிர்ந்தளிக்கவும்.

10. A Hanafi Muslim dies leaving behind his wife, son and a daughter. Divide the property of the deceased.

ஓர் ஹனபி முஸ்லீம் தமது மனைவி, மகன் மற்றும் மகளை விட்டுவிட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பகிர்ந்தளிக்கவும்.

---



Scanned with CamScanner

THE CENTRAL LAW COLLEGE LIBRARY ★ SALEM-636 008. ★

Register No. | | | | | | | | |

**FQJ**

4383–19

(For the candidates admitted from 2009–2010 to 2016–2017)

B.A.B.L./ B.A.LL.B DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019.

(Five–year Regular Course)

Second Year/Fourth Semester

FAMILY LAW–II

Time : Three hours — Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding six pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. State how Hindu Mitakshara coparcenary system is affected by recent legislation.

   இந்து மிதாக்சரா பங்கமைவம் அண்மை கால சட்டங்களால் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பது பற்றி எடுத்துக்கூறுக.

Scanned with CamScanner

2. Explain the powers of a Muslim to make a w[illegible] of his property. State the difference between Hanafi and Shia laws.

ஒரு முகமதியரின் விருப்பாவணமாக்கும் அதிகாரங்களை விளக்குக. ஹனபி மற்றும் ஷியா சட்டத்தில் இருக்கும் வேறுபாடுகளைக் கூறுக.

3. Define Hiba. Explain the essentials of Hiba and its kinds.

ஹிபா என்பதை வரையறு. ஹிபாவின் முக்கிய கூறுகளையும் அதன் வகைகளையும் விளக்குக.

4. Discuss the rules of succession applicable to female intestate under Christian law inheritance.

கிருத்துவ இறங்குரிமை சட்டத்தின் கீழ் பெண் ஒருவர் விருப்பாவணமின்றி இறந்தால் பொருந்தக் கூடிய இறங்குரிமை விதிகளை விவரி.

5. Define letters of administration and state when is it granted

நிருவாக கடிதாவணம் என்பதனை வரையறுத்து அது எப்பொழுது அளிக்கப்படுகிறது என்பதனை கூறுக.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding two pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Partial Partition

பகுதியான பாகப்பிரிவினை

(b) Doctrine of radd

மீட்டளிப்புக் கோட்பாடு

(c) Coparcener

பங்குரிமையர்

(d) Public Mosque

பொது மசூதி

(e) Gains of learning

கற்றதினால் பெறப்பட்ட பயன்கள்

(f) Succession certificate

இறங்குரிமை சான்றிதழ்

(g) Cognate

பெண் வழியினர்



Scanned with CamScanner

(h) Pious obligation

அறநிலைக் கட்டுப்பாடு

(i) Sharers under Hanafi law

ஹனபி சட்டத்தின் கீழ் பங்குதாரர்கள்

(j) Class I heirs

முதல் வகுப்பு வாரிசுகள்

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்

7. A female Hindu died intestate leaving behind her husband, father, mother, one legitimate son, one illegitimate son and two daughters. Distribute her own self acquired property among them.

விருப்பாவணமின்றி இறந்த ஒரு இந்து பெண் தனது கணவன், தந்தை, தாய், ஒரு முறை மணப் பிறப்பு மகன், ஒரு முறையில்லா பிறப்பு மகன் மற்றும் இரண்டு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறார். அவர் ஈட்டிய சொத்துக்களை அவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கவும்.



8. A male Hindu died intestate leaving his step mother, son, daughter of pre–deceased daughter, daughter of pre–deceased daughter of a pre–deceased son and sister. Divide his properties.

ஒரு இந்து ஆடவர் விருப்பாவணமின்றி இறக்கும் பொழுது தனது மாற்றாந்தாய், மகன், இறந்துபோன மகளின் மகள், இறந்து போன மகனின் இறந்து போன மகளின் மகள் மற்றும் உடன் பிறந்தவளை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

9. A Hanafi Muslim dies leaving his widow, son and daughter. Distribute his property.

ஒரு ஹனபி முகமதியர் தனது விதவை,மகன் மற்றும் மகளை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

10. A Christian female dies leaving her two children of pre–deceased son and three children of pre–deceased daughter. Distributed her property.

கிருத்துவ பெண்மணி ஒருவர் தனது இறந்துவிட்ட மகனின் இரண்டு குழந்தைகள் மற்றும் இறந்து விட்ட மகளின் மூன்று குழந்தைகளை விட்டு விட்டு இறக்கிறார். அவளது சொத்தினை பங்கிடுக.



Scanned with CamScanner

11. A Hanafi Muslim died intestate leaving behind his wife, father and mother. Distribute his esta[illegible] among them.

விருப்பாவணமின்றி இறந்த ஒரு ஹனபி முஸ்லீம் தனது மனைவி தந்தை மற்றும் தாயை விட்டு இறந்து விடுகிறார். அவரது சொத்தை அவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கவும்.

12. A Shia Muslim woman died leaving her husband, two sons and a daughter. Divide her estate.

ஒரு ஷியா முகமதியப் பெண்மணி தனது கணவர், இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளை விட்டு விட்டு இறக்கிறார். அவளது சொத்தினை பிரித்தளிக்கவும்.

---



Scanned with CamScanner